[1975 நவம்பர் 12

மோட்டார் வாகனங்கள் சோதனை.

*** 326 வினா—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் :** மாண்புமிகு தொழிலாளர் நலன்—போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மோட்டார் வாகனச் சட்டத்தின்கீழ் தமிழ் நாட்டில் இணை மண்டலப் போக்குவரத்து (Joint Regional Transport Officer) அதிகாரியின் மேற்பார்வையில் மதுரையில் மண்டலப் பறக்கும் படை அமைக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அந்தப் பறக்கும் படை 1973-74, 1974-75 நிதி ஆண்டுகளில் செய்த வேலைகள் யாவை?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) ஆம். ஆனால் 15—9—74 முதல் இணை மண்டலப் போக்குவரத்து அதிகாரிக்குப் பதில் கொங்கு மண்டலத் துணைப் போக்குவரத்து ஆணையரின்கீழ் இந்தப் பறக்கும் படை இயங்கி வருகிறது.

(இ) விவர பட்டியல்* பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்: தலைவரவர்களே, இந்தப் பறக்கும் படை, பேருந்துகளில் அதிகப் பயணிகளை ஏற்றி வருவதைக் கண்டுபிடித்திருக்கிறது. அப்படிக் கண்டுபிடித்ததில் தனியார் பஸ் எவ்வளவு கார்ப்பொரேஷன் பஸ் எவ்வளவு? இந்தத் திட்டம் மற்றப் பகுதிகளுக்கு விரிவுபடுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, இந்தப் பறக்கும் படை மூன்று பகுதிகளாகப் பிரிந்து வேலை செய்கிறது. ஓவர்லோட் போடுகின்றவர்களைக் கண்டுபிடித்து வருகிறது. தனியார் பஸ்ஸிலும், அரசு பஸ்ஸிலும் கண்டுபிடித்து வருகிறது.

---

* 572–577 ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப் பட்டுள்ளது.